# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2019.03.27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# அரச காணி (விசேட ஏற்பாடுகள்)

**அளிப்புகளை அல்லது கையுதிர்ப்புச் சாதனங்களை வைத்திருப்போராகவுள்ள பிரசைகளினால் வைத்தி ருக்கப்பட்ட அரச காணிகளுக்கு முற்றுரிமை உரித்தை வழங்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 25.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ச.வ. - ஓ. 49/2015

**அளிப்புகளை அல்லது கையுதிர்ப்புச் சாதனங்களை வைத்திருப்போராகவுள்ள பிரசைகளினால் வைத்திருக்கப்பட்ட அரச காணிகளுக்கு முற்றுரிமை உரித்தை வழங்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன் (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கவேண்டிய வாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சட்டத்தின் காலஎல்லை.

**2.** இச்சட்டம் ஏழாண்டு காலப்பகுதியொன்றுக்கு நடைமுறை யிலிருத்தல் வேண்டும்.

## பாகம் I

### சட்டத்தின் ஏற்புடைமை

சட்டத்தின்கீழ் தகவுடைமைக் கான கட்டளைக் கற்கள்.

**3.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னரான பத்தாண்டுகளுக்குமேல் பின்வருவனவற்றை வைத்திருப்போராகவுள்ளவர்களும் இதனகத்துப்பின்னர் "விண்ணப்பகாரர்" எனக் குறிப்பீடுசெய்யப் படுபவர்களுமான ஆட்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான அளிப்பொன்று;

(ஆ) காணி அளிப்புகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான கையுதிர்ப்புச் சாதனமொன்று; அல்லது

(இ) ஒரு காணி நிர்ணய நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அல்லது குடியேற்றத் திட்டத்தின்கீழ், கமத்தொழில் நோக்கங்களுக்காக வழங்கப்பட்டதும் முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழானதுமான காணி கையுதிர்ப்புச் சாதனமொன்று:

ஆயின், எவ்வாறாயினும், பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றின்கீழான விண்ணப்பகாரரொருவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பரப்பளவில் ஐந்து ஏக்கர்கள் வரையிலான முற்றுரிமைக் காணி அளிப்பைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கும் தகவுடையவராகவிருப்பதற்கும் உரித்துடையவராகவிருக்கலாம். சொல்லப்பட்ட காணியின் ஏதேனும் மீதிப் பரப்பளவு ஏதேனுமிருப்பின் அது, 28 ஆம் பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, அதன் எல்லை வரையறைக் கூறுகள் தனிவேறாகக் குறித்தளிக்கப்பட்டு, இயைபான காணி அளிப்பின் கீழ் அல்லது கையுதிர்ப்புச் சாதனத்தின் கீழ் விண்ணப்பகாரரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "விண்ணப்பகாரர்" என்பது, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடையற்பாலனவான சட்டங்களின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் நியமத்தர், அளிப்புப்பெறுநர் அல்லது அடுத்துறுபவர் என்போரை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் பத்தாண்டு காலப்பகுதியானது அளிப்பு அல்லது கையுதிர்ப்புச் சாதனத் தேதியிலிருந்து கணிப்பிடப்படுதலும் வேண்டும்.

*சட்டமானது எந்த இடப் பரப்புகளுக்கு ஏற்புடையதாகாதிருத்தல் வேண்டுமோ அந்த இடப் பரப்புகள்.*

**4.** இச்சட்டமானது பின்வரும் அரச காணிகள் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது:-

(அ) எந்த அரச காணிகளின் உயரம், நிகர அளவுக் கடல் மட்டத்துக்குமேலாக ஆயிரத்து ஐந்நூற்றி இருபத்தி நான்கு மீற்றர்களுக்கு மேல் உள்ளதோ அந்த அரச காணிகள்;

(ஆ) எந்த அரச காணிகள் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அபிவிருத்தி இடப்பரப்புகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த அரச காணிகள்;

(இ) எந்த அரச காணிகள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்டவோர் ஒதுக்கிடத்தினுள் அல்லது பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பினுள் அடங்குகின்றனவோ அந்த அரச காணிகள்;

(ஈ) எந்த அரச காணிகள் சட்டத்தின்மூலம் ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டனவோ அந்த அரச காணிகள்;

(உ) எந்த அரச காணிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் உள்ளூரதிகாரசபைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் வெளிப்படுத்தப் பட்டனவோ அந்த அரச காணிகள்; அத்துடன் ஒரு நகர அல்லது கிராமிய மீள் மறுசீராக்கற் கருத்திட்டம், ஒரு நகர அல்லது கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டம், ஓர் உட்கட்டமைப்புக் கருத்திட்டம் அல்லது ஒரு வீடமைப்புக் கருத்திட்டம் என்பவற்றையும் உள்ளடக்கும்;

(ஊ) எந்த அரச காணிகள் ஏதேனும் காணி மீள்நிர்ணய நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் எவரேனும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளனவோ அந்த அரச காணிகள்.

ஒரு விண்ணப்ப காரராக விருப்பதற்கான தகைமையீனம்.

**5**. ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு முற்றுரிமைக் காணி அளிப்புக்காக விண்ணப்பம் செய்வதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அத்தகைய அரசகாணிக்கு ஒரு காலவிதிப்புசார் உரித்தை உரிமைகோருவதன்மீது;

(ஆ) அளிப்பு அல்லது கையுதிர்ப்பு சாதனம் எந்த நிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டுள்ளதோ அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குத் தவறுவதன்மீது;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக;

(ஈ) மோசடியான வழிவகைகள்மூலம் பெற்றுக்கொள்ளப் பட்ட ஓர் அளிப்பின்மீது; அல்லது

(உ) அரசகாணி தொடர்பிலான பிணக்கொன்று, அரசியலமைப்பின்கீழ் அல்லது எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின், நிறுவனத்தின், நியாயசபையின் அல்லது அதிகார சபையின் முன்னர் முடிவுறாதிருக்குமிடத்து.

## பாகம் II

### காணி அளிப்புகள் குழுவும் உபகுழுவும்

*சட்டத்தின் நிருவாகம் காணி அளிப்புகள் குழுவுக்குப் பொறுப்பிக்கப் படுதல்.*

**6.** (1) இச்சட்டத்தின் நிருவாகம், (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுமான காணி அளிப்புகள் குழுவுக்குப் பொறுப்பிக் கப்படுதல் வேண்டும்:-

(அ) காணி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஆ) மகளிர் விவகாரங்கள் என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(இ) கமத்தொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஈ) உள்ளூரதிகாரசபை என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(உ) கமநலச் சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஊ) காடு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(எ) வனசீவராசிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஏ) பெருந்தோட்டங்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஐ) தேசியக் கொள்கை என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஒ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதி யொருவர்;

(ஓ) உள்நாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ஔ) நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(க) அபிவிருத்திக் கருத்திட்டங்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ங) சூழல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(ச) *மகாவலி அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள செயலாளரின் பிரதிநிதியொருவர்;*

(ஞ) *(464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர் அல்லது காணி ஆணையாளருக்காகச் செயலாற்றுகின்ற ஆளொருவர்;*

(ட) *இலங்கை நிலஅளவையாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதியொருவர்;*

(ண) *(117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட காணிப் பதிவாளர் தலைமையதிபதி;*

(த) *காணி விடயங்களில் பத்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக்கொண்டவரும் பகிரங்க அலுவலரொருவராக உள்ளவருமான சனாதிபதியின் நியமத்தரொருவர்;*

(ந) *காணி விடயங்களில் பத்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக்கொண்டவரும் பகிரங்க அலுவலரொருவராக உள்ளவருமான பிரதம அமைச்சரின் நியமத்தரொருவர்;*

*(2) சட்டத்தின்கீழ் குறித்தளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களையும் குழுவானது நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன் அவசியமானவிடத்து:-*

(அ) *அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தலும் வேண்டும்;*

(ஆ) *எவரேனுமாளிடமிருந்து, அரசாங்க நிறுவனமொன்றின் அலுவலரிடமிருந்து அல்லது நிபுணரொருவரிடமிருந்து ஏதேனும் ஆவணப்படுத்துகையை அல்லது விளக்கத்தைக் கோருதல் வேண்டும்;*

(இ) அத்தகைய எண்ணிக்கையினவான உபகுழுக்களை நியமித்தல் வேண்டும்;

(ஈ) சட்டத்தின் நிருவாகத்துக்காக விசேட அல்லது பொதுவான பணிப்புகளை வழங்குதல் வேண்டும்;

(உ) தேவைப்பட்ட படிவங்களும், விண்ணப்பங்களும், ஏனைய ஆவணப்படுத்துகைகளும் தரவுத்தளத்தில் உள்ளடக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) காணி ஆணையாளர் (இதனகத்துப்பின்னர் “தவிசாளர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

குழுவின் கூட்ட நடப்பெண்ணும், ஊதியம் முதலியனவும்.

**7.** (1) குழுவின் கூட்ட நடப்பெண் ஒன்பது ஆட்களாகவிருத்தல் வேண்டும்.

(2) குழுவானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடைய தாதல் வேண்டுமென்பதுடன் குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும் அவ்வெற்றிடம் காரணமாக மட்டும் அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலுமாகாது.

(3) குழுவானது, குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) (அ) எல்லா முடிபுகளும் குழுவின் கூட்டமொன்றில் எடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) ஒரு கூட்டத்தில் கவனத்துட்கொள்ளப்பட்ட ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், அக்கூட்டத்தின் தவிசாளர், அவரது மூலவாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) குழுவின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

குழுவானது தரவுத் தளமொன்றைத் தாபித்தல்.

**8**. (1) குழுவானது, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் தரவுத்தளமொன்றைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) தரவுகளைப் பதியும் நோக்கங்களுக்காக (இதனகத்துப் பின்னர் “பிராந்தியத் தரவுத்தளம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தரவுத்தளமொன்று ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அமைந்திருத்தல் வேண்டும். முறையான விண்ணப்பகாரரின் தேசிய அடையாள அட்டையின் எண்சார் அடிப்படையில் தகவல்களானவை தரவுத்தளத்தில் பதியப்படுதல் வேண்டும்.

(3) எல்லாப் பிராந்தியத் தரவுத்தளங்களும் தவிசாளரிடம் அமைந்துள்ள தரவுத்தளத்துடன் தொடுக்கப்படுதல் வேண்டும். தரவுகளானவை பத்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும்.

உபகுழுவின் நியமனமும் பணிகளும்.

**9**. (1) குழுவானது, சட்டம் தொடர்பான விண்ணப்பத்தில் அடங்கியுள்ள கருமங்களைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக உசிதமானதெனக் கருதுமிடத்து, குழுவின் உறுப்பினர்களு ளிருந்து உபகுழுவொன்றை நியமிக்கலாம்.

(2) குழுவின் தவிசாளர், உபகுழுவின் தவிசாளராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தவிசாளர் -

(i) அரச காணி எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பினுள்ளான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலகத்திடமிருந்து;

(ii) அரச காணி எந்த இயைபான மாகாண சபையினுள் அமைந்துள்ளதோ அந்த இயைபான மாகாண சபையின் பிரதான செயலாளரின் பிரதேச செயலகத்திடமிருந்து;

(iii) அரச காணி எந்த இயைபான மாகாண சபையினுள் அமைந்துள்ளதோ அந்த இயைபான மாகாண சபையின் மாகாணக் காணி ஆணையாளரிடமிருந்து; அல்லது

(iv) ஓர் அரசாங்க நிறுவனத்திலிருந்தான எவரேனும் அலுவலரிடமிருந்து,

தகவல்களைக் கோரலாம்.

உபகுழுவானது அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

**10.** (1) உபகுழுவானது ஒரு மாதத்தினுள் அறிக்கையொன்றைக் குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) உபகுழுவானது -

(அ) சமர்ப்பிக்கப்பட்ட ஆவணப்படுத்துகைகளைச் சரிபார்த்தல் வேண்டும்;

(ஆ) அரச காணியானது 4 ஆம் பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட இடப்பரப்பினுள் அடங்குகின்றதாவெனப் பரிசோதனை செய்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அவசியமாயின் எல்லாத் திறத்தவர்களுக்கும் எழுத்திலான முறையீடுகளைச் செய்வதற்கான சந்தர்ப்பமொன்றை அளித்தல் வேண்டும்.

## பாகம் III

### விண்ணப்ப நடவடிக்கைமுறை

முற்றுரிமைக் காணி அளிப்புக்காக விண்ணப்பிப் பதற்கான அறிவித்தல்.

**11.** (1) குழுவானது முற்றுரிமைக் காணி அளிப்புகளுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி கோருகின்ற தவிசாளரின் கைப்பட்ட அறிவித்தல் ஒன்றை வர்த்தமானியிலும் குறைந்தபட்சம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்திலான ஒரு செய்தித்தாளி லேனும் வெளியிடுதல் வேண்டும்.

(2) குழுவானது அச்சு, செவிப்புல மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக அறிவித்தலுக்குப் பரந்த பிரசித்தம் கொடுக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் பிரதேச செயலாளரின் உதவியுடன், அவசியமாக இருக்கக் கூடியவாறாக, அத்தகைய அறிவித்தலுக்கு அவ்விடப்பரப்பினுள் பரந்த பிரசித்தம் கொடுக்கப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

(3) அறிவித்தலானது பின்வரும் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) 3 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தகவுடைமைக்கான கட்டளைக் கற்கள்;

(ஆ) சட்டமானது எந்த அரச காணி தொடர்பானதோ 4 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அந்த அரச காணிக்கு ஏற்புடையதாதலாகாது;

(இ) 5 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பகாரர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனங்கள்;

(ஈ) விண்ணப்பம் கிடைக்கக்கூடியதாகவிருக்கின்றமை;

(உ) விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதி;

(ஊ) விண்ணப்பகாரரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய பின்வரும் விபரங்கள்:-

(i) மூலப்பிரதியுடன் சேர்த்து அளிப்பின் அல்லது கையுதிர்ப்புச் சாதனத்தின் மூன்று சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகள்; நில அளவை வரைபடம் கிடைக்கக்கூடியதாக இராதிருக்குமிடத்து, மேலதிகச் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்;

(ii) விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டதும், இயைபான காணிப்பதிவகத்திலிருந்தானதும், விண்ணப்பகாரர் தொடர்பிலானதுமான அளிப்பினது அல்லது கையுதிர்ப்புச் சாதனத்தினது பதிவின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதியொன்றும் மேலதிகப் பிரதியொன்றும்;

(iii) பட்டினத்திலிருந்து காணிக்குச் செல்லும் மிகக்கிட்டிய மார்க்கத்தைக் குறித்துக்காட்டுகின்ற வரைதலொன்றும் அத்தகைய நில அளவை வரைபடம் கிடைக்கக்கூடியதாக இராதவிடத்து, சொல்லப்பட்ட மார்க்க வரைதலின் மேலதிகப் பிரதியொன்றும்;

(iv) பிறப்புச் சான்றிதழின் இரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்;

(v) மரண மற்றும் திருமணச் சான்றிதழ்கள் உட்பட, வேறெவையேனும் இயைபான ஆவணங்களின் இரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்;

(vi) கிடைக்கக்கூடியதாகவிருப்பின், அளிப்பில் அல்லது கையுதிர்ப்புச் சாதனத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட வாறாகக் காணியின் பரப்பளவு தொடர்பில் நில அளவையாளர் தலைமையதிபதியின் வரைபடத்தினது மூலப்பிரதியும் நான்கு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும் அல்லது ஒரு கட்டணக் கொடுப்பனவின் மீது அவசியமான மீள்நில அளவையிடப்பட்ட வரைபடங்களைப் பெற்றுக்கொள்ளுதலும்;

(vii) தொடர்புகொள்ளும் விபரங்களுடனும், காணியானது எப்பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அப்பிரதேசத்தின் பிரதேச செயலாளர் பிரிவுடனும், விண்ணப்பகாரரின் பெயர் சுட்டுத்துண்டிடப்பட்ட கோப்புகளின் ஐந்து தொகுதிகள்.

முற்றுரிமைக் காணி அளிப்புக்கான விண்ணப்பம்.

**12.** (1) விண்ணப்பகாரரொருவர், 4 ஆம், 5 ஆம் பிரிவுகளுக்கமைய, 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பரப்பளவு தொடர்பில் முற்றுரிமைக் காணி அளிப்பொன்றுக்காகக் கோருகின்ற விண்ணப்பமொன்றை இணைப் பிரதிகளில் செய்யலாம்.

(2) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து விண்ணப்பகாரரொருவர் இயைபான பிரதேச செயலாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

பிரதேச செயலாளர் விண்ணப்பங்கள் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

**13.** (1) பிரதேச செயலாளர் 11 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட எல்லா ஆவணங்களும் பற்றிய செவ்வைபார்த்தல் நிரலொன்றைப் பேணுதல் வேண்டும். விண்ணப்பங்களையும் ஆவணங்களையும் பெற்றதன்மேல் பிரதேச செயலாளர்–

(அ) வேறெவையேனும் அவசியமான ஆவணங்களைக் கோருதல் வேண்டும்;

(ஆ) நில அளவையாளர் தலைமையதிபதியின் வரைபடங்களுடனோ அவையின்றியோ விபரங்கள் பிராந்தியத் தரவுத்தளத்தினுட் பதியப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) மூலப்பிரதி பெறப்பட்டமையைச் சான்றுப்படுத்தி, அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அவரது கைப்பட்ட புறக்குறிப்பொன்றுடன் அளிப்பின் அல்லது கையுதிர்ப்புச் சாதனத்தின் பிரதியொன்றைக் கையளித்தல் வேண்டும்;

(ஈ) (i) நில அளவை வரைபடமெதுவும் சமர்ப்பிக்கப்பட்டிராதவிடத்து; அல்லது

(ii) காணியானது 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவுக்கான காப்புவாசகம் தொடர்பானதாக விருக்குமிடத்து,

விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களைக் கொடுப்பனவு செய்வதன்மீது, இச்சட்டத்தின் கீழான நிலஅளவை வரைபடமொன்றை வரைவதற்கு இயைபான ஆவணங்களை நிலஅளவையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தகவல்களானவை தரவுத்தளத்தினுட் பதியப்படுதல் வேண்டும்.

(2) பிரதேச செயலாளர், ஒழுங்குவிதியின்மூலம் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும். பிரதேச செயலாளர், எல்லா ஆவணப்படுத்துகைகளும் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாத காலப்பகுதியினுள், இயைபான எல்லா ஆவணங்களுடனும் சேர்த்து அறிக்கையை குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்தசில செயற்பாடுகள் பிரதேச செயலாளருக்குப் பொறுப்பிக்கப் படுதல்.

**14.** (1) பிரதேச செயலாளர்-

(அ) சட்டமானது அவரது எந்த இடப்பரப்புக்காக ஏற்புடையதாதலாகாதோ அந்த இடப்பரப்பினுள் 5 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காணிகள்பற்றிய ஆதனப்பட்டியலொன்றைத் தயாரித்தல் வேண்டும்;

(ஆ) குழுவினால் பணிக்கப்பட்டவாறான இடாப்புக்களைப் பேணுதல் வேண்டும்;

(இ) எல்லா ஆவணங்களும், அறிக்கைகளும், தரவுப் பதிவுகளும் செம்மையானமுறையில் தயாரிக்கப்பட்டு முறைமைசார்ந்தவொரு முறையில் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் குழுவுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்;

(உ) பிராந்தியத் தரவுத்தளத்தை நாளதுவரையாக்குதல் வேண்டும்;

(ஊ) சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவசியமாகக்கூடிய வாறான வெளிக்கள விஜயத்தைச் செய்தல் வேண்டும்;

(எ) விண்ணப்பகாரரினால் கையளிக்கப்பட்ட எல்லா விண்ணப்பங்களையும் வேறு ஆவணங்களையும் காப்பான கட்டுக்காப்பில் பேணிக்காத்தல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான வேறெவையேனும் கருமங்களைப் புரிதலும் வேண்டும்.

*நில அளவை வரைபடங்களைத் தயாரிப்பதில் நில அளவையாளர் தலைமையதிபதி உதவுதல்.*

**15.** (1) நில அளவையாளர் தலைமையதிபதி, பிரிவு 13 (1) (ஈ) என்பதன் நோக்கங்களுக்காக நிலஅளவை வரைபடங்களை வரைவதற்குப் பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளரொருவரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். சொல்லப்படும் பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர், நில அளவைசெய்து வரைபடங்களைத் தயாரித்தல் வேண்டும்; அவை, நிலஅளவையாளர் தலைமையதிபதியின் கோரிக்கை பெறப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் நான்கு பிரதிகளில் செய்யப்படுதல் வேண்டும். நில அளவையாளர் தலைமையதிபதி மேலதிக பிரதியொன்றினை வைத்திருத்தல் வேண்டும்.

(2) நில அளவை வரைபடங்கள் சான்றுபடுத்துகைக்காக நில அளவையாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நில அளவையாளர் தலைமையதிபதி சொல்லப்பட்ட நில அளவை வரைபடங்களைப் பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

*ஆவணங்களை வைத்திருத்தலும் அழித்து விடுதலும்.*

**16.** (1) பிரதேச செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் ஆவணம், இடாப்பிலுள்ள நடைமுறைப் பதிவொன்றை அது ஆதாரப்படுத்தும்வரையும் அதன் பின்னர் பத்தாண்டுகளுக்கும் பிரதேச செயலாளரின் செயலகத்தினுள் வைத்திருக்கப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) உரித்து தொடர்பாக இடாப்பிலுள்ள பதிவுக்குப்பின்னர் பத்தாண்டுகள் முடிவுறுவதன் மீது பிரதேச செயலாளர் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையிலும் மாதிரியிலும் ஆவணங்களை அழித்துவிடலாம். அப்பொருள்பட பதிவொன்று இடாப்பில் செய்யப்படுதல் வேண்டும்.

**குழுவானது விண்ணப்பங்கள் மீதான அவதானிப்புகளைச் செய்தல்.**

**17.** (1) குழுவானது, பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து பெறப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்தையும் இயைபான எல்லா ஆவணங்களையும் பரிசோதனைசெய்தல் வேண்டும். குழுவானது திருப்திப்படுவதன் மீது அதன் அவதானிப்புகளை எழுத்தில் செய்தல் வேண்டும்.

(2) அவசியமானவிடத்து, குழுவானது, அக்கருமத்தை, அதன்மீது அறிக்கையிடப்படுவதற்காக, 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உபகுழுவுக்கு அனுப்பிவைக்கலாம். குழுவானது அறிக்கையைக் கவனத்துட்கொண்டு, திருப்திப்படுவதன் மீது அதன் அவதானிப்புகளை எழுத்தில் செய்தல் வேண்டும்.

(3) காலத்துக்குக்காலம் திருத்தப்படவேண்டியவையும், ஒவ்வொரு பிரதேசசபைச் செயலாளர் தொடர்பிலும் 11 (3) (ஊ) என்னும் பிரிவின் கீழானவையுமான விபரங்களை நிறைவேற்றுகின்ற விண்ணப்பங்களின் நிரலொன்றைக் குழுவானது தயாரித்தல் வேண்டும்.

(4) குழுவானது திருப்திப்படாதவிடத்து, எழுத்திலான காரணங்களுடன் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### ஆட்சேபனைகள்

**ஆட்சேபனைகள்.**

**18.** (1) பிரிவு 17 (3) இன் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பகாரர்களின் நிரல் உட்பட, ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறானமுறையில் குழுவானது, தவிசாளரின் கைப்பட அறிவித்தலொன்றை வெளியிடுதல்

வேண்டும். பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கும் ஆட்சேபனைகள் எவையேனுமிருப்பின் அவற்றை அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பமொன்றை அளிப்பதற்கும் ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாளிலும் அறிவித்தலானது வெளியிடப்படுதல் வேண்டும். 19 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தினால் ஆட்சேபனைகள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஆட்சேபனைகளுக்கான அறிவித்தல் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கான முறையும் இடமும்;

(ஆ) ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதி; அத்துடன்

(இ) அவசியமென ஆணைக்குழு கருதக்கூடியவாறான வேறெவையேனும் கருமங்கள்.

குழாம்களை நியமித்தல்.

**19.** (1) அமைச்சர், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்காகவும், குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவையும், அவசியமாக விருக்கக்கூடியவையுமான அத்தகைய எண்ணிக்கையினவான குழாம்களை நியமித்தல் வேண்டும்.

(2) குழாமானது ஆட்சேபனைகளைக் கவனத்துட்கொண்டு குழுவுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) (அ) ஒவ்வொரு குழாமும், பிரதேச செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, காணி விடயங்களில் அனுபவம் வாய்ந்த சட்ட உயர்தொழிலிலிருந்தான ஆளொருவரையும், இலங்கை நிருவாகச் சேவையின் வகுப்பு III அலுவலர்கள் என்ற பதவிவரிசைக்கு மேற்பட்ட இரண்டு ஓய்வுபெற்ற பகிரங்க அலுவலர்களையும் கொண்டுள்ள மூன்று ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். குழாத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் எழுபது வயதுக்கு மேற்பட்டோராக இருத்தலாகாது.

(ஆ) இயன்றவிடத்து குழாமானது குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினரையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சட்ட உயர்தொழிலிலிருந்தான ஆளொருவர் குழாத்தின் தலைவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் தவிசாளர் குழுவின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதலும் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், தம்முள்ளிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) குழாத்தினால் முடிபுக்கான எல்லாக் கருமங்களும் குழாத்தின் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையோரினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும். குழாத்தின் எல்லா முடிபுகளும் காரணங்களினால் ஆதாரப்படுத்தப்படுதலும் எழுத்திலிருத்தலும் வேண்டும்.

(6) அமைச்சர், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட வேண்டியவையும் குழாத்தின் அலுவல்களை நடாத்துவதற்கானவை யுமான வழிகாட்டுநெறிகளை வழங்குதல் வேண்டும்.

(7) குழாத்தின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

(8) ஏதேனும் குழாத்தின் உறுப்பினரொருவர், எந்நேரத்திலும், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, அவரது கைப்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியை வறிதாக்கலாம் அல்லது அமைச்சரினால் அகற்றப்படலாம். அமைச்சர், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, குழாத்திற்கு வேறோராளை நியமிக்கலாம்.

குழாத்தின் அவதானிப்புகள்.

***20***. குழாத்தின் உறுப்பினர்கள், கருமம்பற்றி விசாரணை செய்யும்போது, ஆட்சேபனைகளைப் பெற்றதிலிருந்து மூன்று மாதங்களினுள், எல்லாத் திறத்தவர்களையும் கேட்டலும், ஆவணங்களைக் கோருதலும், எவையேனும் தகவல்களைக் கவனத்துட்கொள்ளுதலும், அதன் அவதானிப்புகளைக் குழுவுக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

குழாத்தின் அவதானிப்புகளைக் குழுவானது கவனத்துட் கொள்ளுதல்.

***21***. குழுவானது, ஆட்சேபனைகள்பற்றிய அதன் முடிபைச் செய்யும்போது குழாத்தின் அவதானிப்புகளைக் கவனத்துட் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அதன் முடிபுபற்றி ஆட்சேபனைகளைச் செய்த ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும். குழுவின் முடிபுக்கெதிராக மீளாய்வுச் சபைக்கான மேன்முறையீடொன்றுக்கமைய, குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும். மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, குழுவானது மீளாய்வுச் சபையின் முடிபுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

## பாகம் V

### *மீளாய்வுச் சபை*

மேன்முறையீடு.

***22***. (1) பிரிவு 17 (4) இன்கீழ் குழுவின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், முடிபானது அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், குழுவுக்கான பிரதியொன்றுடன், அத்தகைய முடிபுக்கெதிராக மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். மீளாய்வுச் சபையானது குழுவின் முடிபை வேறுபடுத்தலாம், எதிர்மாறாக்கலாம் அல்லது உறுதிப்படுத்தலாம்.

(2) மீளாய்வுச் சபைக்கான மேன்முறையீடொன்று செய்யக்கூடியதாகவுள்ளவிடத்து, குழுவானது மீளாய்வுச் சபையின் முடிபுக்குக் காத்திருந்து அத்தகைய முடிபுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

**23.** (1) மீளாய்வுச் சபையானது அமைச்சரினால் நியமிக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:- *மீளாய்வுச் சபையை நியமித்தல்.*

(அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்;

(ஆ) ஓய்வுபெற்ற காணிப் பதிவாளர் தலைமையதிபதி அல்லது மேலதிகப் பதிவாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர்; அத்துடன்

(இ) காணி விடயங்களில் ஒரு மேலதிக செயலாளராகச் சேவையாற்றியுள்ள ஓய்வுபெற்ற பகிரங்க அலுவலரொருவர் அல்லது காணி விடயங்களில் பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள வேறு ஆள்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, குழாத்தின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் தவிசாளர், குழுவின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் தம்முள்ளிருந்து அக் கூட்டத்துக்கான தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படவேண்டியவையும், மீளாய்வுச் சபையின் அலுவல்களை நடாத்துவதற்கானவையுமான வழிகாட்டுநெறிகளை அமைச்சர் வழங்கலாம்.

(4) மீளாய்வுச் சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

(5) மீளாய்வுச் சபையின் உறுப்பினரொருவர், எந்நேரத்திலும், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, அவரது கைப்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியை வறிதாக்கலாம் அல்லது அமைச்சரினால் அகற்றப்படலாம்.

(6) இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் மீளாய்வுச் சபையின் எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, மீளாய்வுச் சபைக்கு வேறெவரேனுமாளை நியமிக்கலாம்.

(7) மீளாய்வுச் சபையினால் முடிபுக்கான எல்லாக் கருமங்களும் மீளாய்வுச் சபையின் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையோரினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(8) மீளாய்வுச் சபையின் எல்லா முடிபுகளும் காரணங்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் எழுத்திலிருத்தலும் வேண்டும்.

*மீளாய்வுச் சபையின் முடிபு, குழு முதலியவர் களுக்கு அறிவிக்கப் படுதல்.*

**24**. மீளாய்வுச் சபையானது, எல்லா ஆவணங்களையும் பரிசோதனைசெய்து அதன் நிகழ்வுகள் பற்றி விசாரணைசெய்தல் வேண்டும். சொல்லப்பட்ட மீளாய்வுச் சபை, மேன்முறையீட்டைப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் அதன் முடிபைக் குழுவுக்கும் மேன்முறையீட்டாளருக்கும் அறிவித்தல் வேண்டும். சொல்லப்பட்ட முடிபு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

## பாகம் VI

### முற்றுரிமை உரித்தை வழங்குவதற்கான நடவடிக்கைமுறை

*குழுவானது அவதானிப்பு களை அமைச்சருக்கு அனுப்பி வைத்தல்.*

**25**. குழுவானது, பின்வருவன உட்பட, முற்றுரிமைக் காணி அளிப்புகளுக்கான எல்லா விண்ணப்பங்களின்மீதும் இயைபான ஆவணங்களின்மீதும் அதன் அவதானிப்புகளை அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்:-

(அ) குழாத்தின் அவதானிப்புகள்; அத்துடன்

(ஆ) மீளாய்வுச் சபையின் முடிபு.

*முற்றுரிமைக் காணி அளிப்புகளின்மீது சனாதிபதி முடிபுசெய்தல்.*

**26.** (1) அமைச்சர், அவதானிப்புகளையும் இயைபான ஆவணங்களையும் பெறுவதன்மீதும், அவற்றின் சரியானதன்மை பற்றித் திருப்திப்படுவதன்மீதும், செயல்முறைக்குகந்தவரை விரைவாக அத்தகைய அவதானிப்புகளையும் ஆவணங்களையும் சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) சனாதிபதி, அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புகளையும் இயைபான ஆவணங்களையும் கவனத்துட்கொண்டு, முற்றுரிமை காணி அளிப்புகளை வழங்குதல் பற்றி முடிபுசெய்தல் வேண்டும். குடியரசின் பொது இலச்சினை சொல்லப்பட்ட அளிப்புகளில் பொறிக்கப்படுதல் வேண்டும்.

*முற்றுரிமைக் காணி அளிப்புகளைப் பதிவுசெய்தல்.*

**27.** (1) சனாதிபதியினால் வழங்கப்பட்ட முற்றுரிமைக் காணி அளிப்புக்காகப் பெறுமதிவாய்ந்த பிரதிபயன் எதுவும் விதிக்கப்படுதலாகாது.

(2) சனாதிபதியினால் வழங்கப்பட்ட முற்றுரிமைக் காணி அளிப்புகளைக் குழுவானது இயைபான காணிப் பதிவகத்துக்குப் பதிவுசெய்யப்படுவதற்காக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) குழுவானது, பதிவுசெய்யப்பட்ட முற்றுரிமைக் காணி அளிப்புகளை, அந்தந்த அளிப்புப் பெறுநர்களுக்குக் கையளிக்கப்படுவதற்காக இயைபான பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று கமநல அபிவிருத்தி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*அளிப்பையும் கையுதிர்ப்புச் சாதனத்தையும் இல்லாதாக்குதல்.*

**28.** இயைபான காணிப் பதிவாளரினால் முற்றுரிமைக் காணி அளிப்பு பதிவுசெய்யப்படுவதன்மேல், அளிப்பு அல்லது கையுதிர்ப்புச் சாதனம் தன்னியக்கமாகவே இல்லாதாக்கப் பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பிரிவு 3 (1) இன்கீழான காப்பு வாசகத்தில்ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகக்காணியொன்று பரப்பளவில் ஐந்து ஏக்கர்களை விஞ்சுமிடத்து, இயைபான சட்டங்களின்கீழ் காணியின் மீதிப் பரப்பளவுக்காக ஒரு புதிய காணி அளிப்பு அல்லது கையுதிர்ப்புச் சாதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

அளிப்புப் பெறுநரினால் கொள்வனையாள ரொருவருக்குக் காணி கைமாற்றப் படுதல்.

**29.** (1) ஒரு முற்றுரிமைக் காணி அளிப்பொன்றின் அளிப்புப் பெறுநர் மரபுரிமையாளர்களுக்குக் காணியைக் கைமாற்றுவதற்கு அல்லது எல்லா மரபுரிமையாளர்களினதும் எழுத்திலான சம்மதத்துடன் எவரேனுமாளுக்கு அத்தகைய காணியை விற்பனை செய்வதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்டதும் நெற்பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப் பட்டதுமான முற்றுரிமைக் காணி அளிப்பின் அளிப்புப்பெறுநர் அத்தகைய காணியைப் பிரிவிடுவதற்கு உரித்துடையவராதலாகாது:

ஆயின், மேலும், நெற்பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் காணி, பின்வருபவராக இருக்கவேண்டிய கொள்வனை யாளரொருவருக்கு மட்டுமே விற்பனை செய்யப்படலாம்:-

(i) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு கமக்காரர் அடையாள அட்டையையும் கடந்த இரண்டாண்டுகளினுள்ளானதாக இருக்க வேண்டிய விண்ணப்பகாரரின் உறுப்பாண்மைப் பதிவின் சான்றுபடுத்தப்பட்டவொரு பிரதியையும் வைத்திருப்பவர்; அத்துடன்

(ii) அரச காணி அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவில் அல்லது அருகாமையிலுள்ள ஏதேனும் கிராம அலுவலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளரொருவராக உள்ளாரென்பதற்கான எண்பிப்பைச் சமர்ப்பிப் பதற்குத் தேவைப்படுத்தப்படுபவர்.

அத்துடன் அத்தகைய கொள்வனையாளர், எல்லா மரபுரிமை யாளர்களினதும் எழுத்திலான சம்மதத்தின்மேல் சொல்லப்பட்ட காணியைக் கொள்வனவுசெய்யலாம்.

(2) இப்பிரிவின் கீழான பராதீனப்படுத்துதலொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக-

(அ) கைமாற்றல் உறுதியை நிறைவேற்றும் நொத்தாரிசு -

(i) (107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உரியமுறையில் இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(ii) சரிபார்த்தபின்னர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள்பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும்;

(ஆ) காணிப் பதிவாளர் அல்லது உரித்துப் பதிவுப் பதிவாளர், கைமாற்றல் உறுதி பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்படும்போது (அ) என்னும் பந்தியை நீதிநெறிக்கவனத்துக்குட்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) குழுவினால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட முற்றுரிமைக் காணி அளிப்பின் பிரதியொன்று அடுத்துப்பின்னரான கைமாற்றல்களைப் பரிசோதனை செய்வதற்காக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**30.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக,- ஐயத்தைத் தவிர்த்தல்.

(அ) இச்சட்டத்தின்கீழ் சனாதிபதியினால் வழங்கப்பட்ட முற்றுரிமைக் காணி அளிப்பானது அக்காணிக்கான முற்றுரிமை உரித்துப்பற்றி முடிவான சான்றாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) முற்றுரிமைக் காணி அளிப்பானது, ஏதேனும் கொடுக்கல்வாங்கல், அலுவல், உரித்துக் கைமாற்றம் என்பவற்றுக்காக, ஒரு முறிக்கான பிணைப் பொறுப்பாக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக ஏதேனும் நீதிமன்றம், நிறுவனம் அல்லது அதிகாரசபையின் முன்னர் ஏல்தகவுடையதாகவும் செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

## பாகம் VII

### பொது

**31.** சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிக்கையில் ஒரு முற்றுரிமைக் காணி அளிப்புக்கான விண்ணப்பகாரர் தொடர்பிலான ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறையொன்றைக் கொண்டுள்ளவரான குழுவின், குழாத்தின் அல்லது மீளாய்வுச் சபையின் உறுப்பினரொருவராகவிருக்குமிடத்து அல்லது வேறெவரேனும் அலுவலர், அவரது அக்கறையின் தன்மையைத் தவிசாளருக்கு வெளிவிடுதல் வேண்டும்; அவர், சட்டத்துக்கிணங்க அத்தகைய நோக்கத்துக்காக வேறோராள் நியமிக்கப்படுவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வார் அல்லது அமைச்சருக்கு அறிவிப்பார்; அமைச்சர் அத்தகைய நோக்கத்துக்காக வேறொருவரை நியமிப்பார். அக்கறைகளை வெளிவிடுதல்.

**32.** (1) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவினதும் பிரதேச செயலாளர், குழுவானது பணிக்கக்கூடியவாறாகக் காலாண்டு அறிக்கைகளைக் குழுவுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அவ்வறிக்கையானது, சட்டத்திற் குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுக்களினுள் எய்தப்பட்ட முன்னேற்றம், மதிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் நியமிக்கப்பட்ட குழாம்கள் என்பவற்றை உள்ளடக்கலாம். சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்.

(2) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் பொறுப்பேற்கப்பட்ட கருமங்கள்பற்றிய வரைபொன்றைக் கொண்டுள்ள ஆண்டுக்கு இருமுறையான முன்னேற்ற அறிக்கைகளைக் குழுவானது அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அடுத்துவரும் இரண்டாண்டுக்கிருமுறையான காலப்பகுதியின்போது சட்டத்தின்கீழான கருமங்கள் எந்தக் காலக்கெடுக்களினுள் நிறைவேற்றப்பட வேண்டுமோ அந்தக் காலக்கெடுக்களை அறிக்கையானது முன்கணித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை, ஆண்டுதோறும் அமைச்சரினால் பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**33.** (1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்கு அல்லது எக்கருமங்கள் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் பின்வருவனபற்றிய ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) 26 ஆம் பிரிவின்கீழான முற்றுரிமைக் காணி அளிப்புக்கான விண்ணப்பத்தின் படிவம்;

(ஆ) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கப்பால் தேவைப்படுத்தப்படும்போது ஆவணங்களின் மேற்கொண்ட பேணிக்காப்பு சம்பந்தமாக;

(இ) ஆவணப்படுத்துகையை அனுப்புவதற்குப் பிரதேச செயலாளரினால் தயாரிக்கப்படவேண்டிய கோப்புகள்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்றுமாதங்களினுள், அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஓர் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**34.** பிரதேச செயலாளரினால் அளிப்பின் அல்லது கையுதிர்ப்புச் சாதனத்தின் இணைப்பிரதியில் செய்யப்பட்ட புறக்குறிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

பொருள்கோடல்.

**35.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"குடியேற்றத் திட்டம்" என்பது, அரச காணியின் மீது குடும்பங்களைக் குடியமர்த்துவதற்குக் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட ஏதேனும் திட்டத்தையும் உள்ளடக்கும்;

"முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம்" என்பது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம் என்று பொருளாகும்;

"பிரதேச செயலாளர்" என்பது, 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, தத்துவங்களைக் கைமாற்றுதல் (பிரதேச செயலாளர்கள்) சட்டத்தின்கீழ் காணியானது எந்தப் பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதோ அந்தப் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் என்று பொருளாகும்;

"நிதிநிறுவனம்" என்பது, கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் வகையினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் அடகுகள், ஈடுகள், அடைமானங்கள் அல்லது ஒழுங்கேற்பாடுகளை ஏற்றுக்கொள்கின்ற அல்லது எவ்வடிவத்திலுமான நிதிவசதியை அல்லது வேறு நிதிசார் சேவைகளை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனம் என்று பொருளாகும்;

"தகவல்கள்" என்பது, வாய்மொழிமூலமான அல்லது ஆவணமுறையான சான்றையும் உள்ளடக்கும்;

"காணி ஆணையாளர்" என்பது, (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர் என்று பொருளாகும்;

"காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம்" என்பது, (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் என்று பொருளாகும்;

"காணி அளிப்புகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காணி அளிப்புகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என்று பொருளாகும்;

"காணி நிர்ணய நிகழ்ச்சித்திட்டம்" என்பது, அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏதேனும் குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தையும் உள்ளடக்கும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது, (255 ஆம் அத்தியாயமான) நகரசபை கட்டளைச்சட்டம், (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைக் கட்டளைச்சட்டம் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேசசபைச் சட்டம் என்பவற்றின்கீழான நகரசபை, மாநகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் கீழ் இச்சட்டத்தின் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, ஒரு பிரசை என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பு" என்பது, பின்வருவனவற்றின் ஏற்பாடுகளினால் ஒதுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட ஏதேனும் காணியையும் உள்ளடக்கும்:-

(i) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்;

(ii) (696 ஆம் அத்தியாயமான) காட்டுக் கட்டளைச் சட்டம்;

(iii) 1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேசிய மரபுவழி கானக இடப்பரப்புச் சட்டம்;

(iv) (496 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் சட்டம் ;

(v) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டம்;

(vi) (188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச்சட்டம்.

"ஒதுக்கிட இடப்பரப்பு" என்பது, பின்வருவனவற்றின் ஏற்பாடுகளின்மூலம் ஒதுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட ஏதேனும் காணியையும் உள்ளடக்கும்:

(i) *1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணி (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டம்;*

(ii) *(453 ஆம் அத்தியாயமான) நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டம்;*

(iii) *(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டம்;*

(iv) *1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டம்;*

(v) *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்;*

(vi) *2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம்;*

(vii) *(193 ஆம் அத்தியாயமான) பொதுவழிகள் கட்டளைச்சட்டம்;*

(viii) *1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டம்;*

"பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர்" என்பது, 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"காணிப் பதிவாளர் தலைமையதிபதி" என்பது, பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியையும் அல்லது ஓர் உதவிப் பதிவாளர் தலைமையதிபதியையும் உள்ளடக்குதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**36.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை I

[பிரிவு 13 (1) (இ)]

பிரதேச செயலாளரினால் செய்யப்படவேண்டிய புறக்குறிப்பு

இது......................... ஆம் ஆண்டு......................... மாதம் ......................... ஆந்தேதியன்று ......................... பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளருக்குக் கையளிக்கப்படும் மூல அளிப்பின் / கையுதிர்ப்புச் சாதனத்தின் உண்மைப் பிரதியென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

......................................

கையொப்பம்

இலச்சினை